**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.68** **நாள் : 16.05.2018**

**காசநோயற்ற சென்னையை உருவாக்குவதற்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவின்படி, சென்னை காசநோய் தடுப்பு திட்டம் குறித்து இந்திய மருத்துவ சங்கத்தின் உறுப்பினர்கள், தனியார் மருத்துவர்கள், தனியார் மருத்துவமனை இயக்குநர்கள், மருந்தாளுநர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஆய்வக நுட்புநர் சங்கத்தினர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம் பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை மூலமாக இன்று (16.05.2018) ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெற்றது.

சென்னை மாவட்டத்தில் காசநோய் இல்லா நிலையை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்பணிக்கு உறுதுணையாக தனியார் மருத்துவர்கள், ஆய்வகத்தினர்கள், மருந்தாளுநர்கள் காசநோய் பரிசோதனை செய்து நோயாளிகளுக்கு காசநோய் இருப்பதை கண்டறிந்தால் அரசுக்கு தெரியப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சியின் 140 ஆரம்ப சுகாதார நிலையங்களில் காசநோய்க்கான பரிசோதனை மற்றும் சிகிச்சை இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது காசநோய் மரபணு பரிசோதனை கருவியான CBNAAT கருவிகள் 15 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொருத்தப்பட்டு இயங்கி வருகிறது. இதில் தனியார் மருத்துவமனைகளை நாடும் காசநோய் அறிகுறிகள் உள்ள நோயாளிகளுக்கு இலவசமாக பரிசோதனை செய்யப்படும் எனவும், தற்போது அரசாணையின்படி, சிகிச்சை மேற்கொள்ளும் ஒவ்வொரு காசநோயாளிக்கும் அரசு மாதந்தோறும் ரூ.500/- உதவித்தொகை வழங்கி வருகிறது எனவும்,

இத்திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து ரீச் என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மற்றும் தேசிய காசநோய் ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு

வருகிறது. மேலும், காசநோய் இல்லா சென்னை திட்டம் பற்றியும், தனியார் மருத்துவமனைகளின் பங்கு குறித்தும் விளக்கப்பட்டது. காசநோய்க்கான புதிய பரிசோதனை மற்றும் சிகிச்சை முறைகள் குறித்து இணையதள கல்வி முறைப் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு சங்கக் கூட்டத்திலும் காசநோய் குறித்த விழிப்புணர்வும் மற்றும் அரசாங்கத்திடம் காசநோய் குறித்த அறிவிப்பு செய்வது பற்றியும் எடுத்துரைக்கப்படும். மருந்தாளுநர்களும் காசநோயாளிகள் குறித்த தகவலை அரசாங்கத்திடம் முறையாக மாதம் ஒரு முறை சமர்ப்பிக்க வேண்டும் எனவும்,

அரசு காசநோய் தடுப்பு பிரிவுடன் இணைந்து தனியார் மருத்துவ நிர்வாகங்களும் காசநோய் பாதித்தவர்களின் தகவலை வழங்கினால்தான், சென்னை மாவட்டத்தில் காசநோயில்லா நிலையை முழுமையாக உருவாக்க முடியும். காசநோய் குறித்த அறிவிப்பை அரசாங்கத்திடம் தெரிவிக்கும் முறை பற்றியும், தனியார் துறை இத்தகவலை dtotncni@rntcp.org என்னும் மின்னஞ்சலுக்கும், அவர்கள் இருக்கும் பகுதியில் உள்ள காசநோய் பிரிவில் பணிபுரியும் முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர்களுக்கும் தெரிவிக்கலாம் அல்லது 9445036388 என்னும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டும் தகவலை தெரிவிக்கலாம். காசநோய் கண்டறியப்பட்ட நோயாளிகள் குறித்த தகவல் தெரிவிக்காவிட்டால் அவர்கள் மீது இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் உள்ள 269, 270 பிரிவுகளின்படி நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரது சந்தேகங்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் 500-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அவர்களிடமிருந்து மாவட்ட காசநோய் பிரிவில் தனியார் துறையை பதிவு செய்யும் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு பெறப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், மாநகர நல அலுவலர் மரு.நி.ஆ.செந்தில் நாதன் அவர்கள், திட்ட அலுவலர் மரு.ஜெ.லாவண்யா அவர்கள், ரீச் அமைப்பு இயக்குநர் மரு.நளினி

அவர்கள், தேசிய காசநோய் ஆராய்ச்சி நிலைய மருத்துவர் பானு ரேகா அவர்கள், இந்திய மருத்துவ சங்க மாநகர தலைவர் மரு.என்.முத்து ராஜன் அவர்கள், மாநில மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் திரு.கே.சிவபாலன் அவர்கள், உலக சுகாதார சங்க ஆலோசகர் மரு.சுமா அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**